

# இடம் பொருள் கலைஞர்

74

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் சென்னை அரசு இருதய இயல் நிலையம்!



# சென்னை அரசு இருதய இயல் நிலையம்!

## துடிக்கும் இதயங்களைக் காக்கும் நாட்டின் முதல் கரங்கள்

இந்தியாவில் தொற்றா நோய்கள் பிரிவில், மக்களை அதிகம் தாக்கும் நோய்களில் ஒன்றாக இதயம் தொடர்பான நோய்கள்தான் இருக்கின்றன. மனச்சுமை ஏற்படுத்தும் அளவுக்கான பணிச்சூழல், போதிய அளவுக்கு சரிவிகிதச் சத்து உள்ள உணவை எடுக்காதது, நொறுக்குத் தீனிகளை அதிகம் சாப்பிடுவது, உடற்பயிற்சியின்மை என இதய நோய்கள் ஏற்படுவதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.



நாட்டில் தொற்றா நோய்களில், சுமார் 26 சதவிகிதம் இறப்புகள் இதய நோய்கள் காரணமாக ஏற்படுகின்றன என்கிறது, உலக சுகாதார நிறுவனம். இந்தியாவில் அதிக அளவில் இதய நோய்கள் ஏற்படும் மாநிலங்களின் பட்டியலில் முதல் ஐந்து இடங்களுக்குள் தமிழ்நாடு இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அதிலும், 40 வயதுக்குள் இருக்கும் இளைஞர்கள் பலர் ஜிம்மில் உடற்பயிற்சி செய்யும்போதோ, அல்லது விளையாடிக் கொண்டிருக்கும்போதோ மாரடைப்பால் இறக்கிறார்கள் என்று வரும் செய்திகள் இன்று வாடிக்கையாகிவிட்டன.

எனினும், இதர நோய்களுக்கான சிகிச்சையைப் போன்று, இன்றைக்கு இதய நோய்கள் தொடர்பான சிகிச்சைகளுக்கும் தமிழ்நாடுதான் முன்னணி மாநிலமாக இருக்கிறது. அதற்கான காரணம், பல இதய நிபுணர்களை உருவாக்கிய 'இன்ஸ்டிடியூட் ஆஃப் கார்டியாலஜி', அதாவது, 'இருதய இயல் நிலையம்'. இது சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ளது. அதற்கு வழிவகுத்தவர், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

### இந்தியாவில் முதல் நிலையம்

1972-ஆம் ஆண்டு ஏப்ரல் 7 அன்று, **உலக சுகாதார நிறுவன நாள்** அனுசரிக்கப்பட்டது. அதே நாளில், ரூ.75 இலட்சம் செலவில் கட்டப்பட்ட எட்டு அடுக்கு மாடிக் கட்டடம் ஒன்று, சென்னை அரசுப் பொது மருத்துவ மனையில் கலைஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. அதுதான் இருதய இயல் நிலையம். கூடவே, சென்னையில் முதன்முதலில் இருதய நோய் சிகிச்சையைத் தொடங்கி வைத்த மறைந்த மருத்துவர் சதாசிவத்தின் நினைவாக, அவரது உருவச் சிலையும், கலை அரங்கம் ஒன்றும் அந்தப் புதிய கட்டடத்தில் திறந்து வைக்கப்பட்டன.

அந்தக் கட்டடம், முழுமையும் இருதய இயலுக்காகவே கட்டப்பட்டது. அப்படி அரசு மருத்துவமனை ஒன்றில், இருதய சிகிச்சைக்காகவே அர்ப்பணிக்கப்பட்ட பல மாடிக் கட்டடம் அன்று இந்தியாவிலேயே அது மட்டும்தான். அங்கு அன்றைய தேதியில் இருதய சிகிச்சைகளுக்குத் தேவைப்பட்ட நவீன கருவிகள் எல்லாம் அமெரிக்கா, ரஷ்யா, ஹாலந்து போன்ற நாடுகளில் இருந்து வாங்கப் பட்டன. அவற்றின் மதிப்பு ரூ.10 இலட்சம் அளவுக்கு இருந்தது.

அன்றைக்கு முதல் தளத்தில் நோயாளிகளின் மருத்துவ ஆய்வறிக்கைக் காப்பகமும், இரண்டாம் தளத்தில் மருத்துவ ஆய்வகமும், நூலகமும், மூன்றாம் மற்றும் நான்காம் தளங்களில் பொது, சிறப்பு மற்றும் குழந்தை களுக்கான வார்டுகளும், ஐந்தாம் தளத்தில் கலைஅரங்கமும், ஆறாம் தளத்தில் கதீட்டர் ஆய்வகமும், ஐ.சி.யூ.வும், ஏழாம் தளத்தில் அறுவை சிகிச்சை அரங்குகளும் இருந்தன.

**கிராமங்களில் இருந்த மக்கள் நகரங்களுக்கு வரத் தேவையில்லாமல், உள்ளூரிலேயே மருத்துவம் பார்த்துக்கொள்ளவும் முடிந்தது!**

### யார் அந்த சதாசிவன்?

மருத்துவர் சதாசிவன் (1916 - 1970), இந்தியாவின் முன்னோடி இருதயவியல் நிபுணர் ஆவார். சென்னையில் இருதய சிகிச்சையை இவர்தான் தொடங்கினார். தவிர, குழந்தைகளுக்கான இருதய அறுவை சிகிச்சைக்கும் இவர் தான் முன்னோடி. ஒரு குறிப்பிட்ட வகையான இருதய நோயாளிகளுக்கு அறுவை சிகிச்சையின் போது வால்வு ஒன்று வைக்கப்படும் முறை 1950 களில் அமெரிக்காவில் அறிமுகமானது. டாக்டர் ஸ்டார் மற்றும் எட்வர்ட்ஸ் என்ற மருத்துவர்கள் கண்டுபிடித்த அந்த வால்வைக் கொண்டு இந்தியாவில் சிகிச்சை அளிக்கும் முறையைத் தொடங்கியவரும் இவர்தான். இவர் சிந்தனையில் வடிவமைக்கப் பட்டதுதான் இருதய இயல் நிலையம். இந்த நிலையம், சென்னை ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை வளாகத்தில், 'டவர்-3'க்குப் பின்புறம் உள்ளது.

### மூன்று இலக்குகள்

இந்த நிலையம் திறந்து வைக்கப்பட்ட போது, அதற்கு மூன்று இலக்குகள் இருந்தன. இருதய நோய்கள் ஏற்படாமல் தடுப்பது, அந்த நோய்களுக்குச் சிகிச்சை அளிப்பது,



சிகிச்சை பெற்றவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது ஆகியவைதான் அவை. அந்த இலக்குகளை நிறைவேற்றும்விதமாக அந்த நிலையத்தில் சகல வசதிகளும் இருந்தன.

இருபத்து நான்கு மணி நேரமும் செயல்பட்ட அந்த நிலையத்தில், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை, ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இல்லாமல், இருதய நோய் சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன. அன்று 120 படுக்கை வசதிகள் கொண்ட அந்த நிலையத்தில்,'கட்டுப்பாட்டு அறை' என்ற ஒன்றிருந்தது. அதில் மருத்துவர்களும் செவிலியர்களும் இருந்த இடத்தில் இருந்தே நோயாளிகளைக் கவனித்துக் கொள்ள முடிகிற வசதி இருந்தது.

ஒவ்வொரு நோயாளியின் பிரச்சினைகள் பற்றி, அதற்கென வடிவமைக்கப்பட்ட 'கேஸ் ஷீட்'டில் குறித்து வைக்கப்பட்டு, பின்னர் அவை கணினியில் பதிவேற்றும் முறை அப்போதே இருந்தது. அவை நிரந்தரமாகவும் சேமித்து வைக்கப்பட்டன. இதனால், இதயநோய்களால் இறக்கும் நோயாளிகளின் உடல்களை தானமாகப் பெற்று, இதய நோய்கள் தொடர்பான ஆய்வுகளை முன்னெடுக்க முடிந்தது.

அந்த ஆண்டு, ஜூலை மாதம் முதல் அந்த நிலையத்தில் இருதய சிகிச்சை பட்ட மேற்படிப்புகள் தொடங்கப்பட்டன. தவிர, பிற அரசு மருத்துவமனைகளைச் சார்ந்த மருத்துவர்கள், தொழில்நுட்ப உதவியாளர்கள், செவிலியர்கள் ஆகியோருக்குப் பயிற்சி அளிக்கும் இடமாகவும் இது செயல்பட்டு வந்தது. இதனால், மாவட்ட அளவிலான அரசு மருத்துவமனைகளில் இருந்த மருத்து வர்களுக்கு இதய நோய்களுக்குச் சிகிச்சை அளிக்கும் அனுபவம் கிடைத்தது. அதன் மூலம், கிராமங்களில் இருந்த மக்கள் நகரங் களுக்கு வரத் தேவையில்லாமல், உள்ளூரிலேயே மருத்துவம் பார்த்துக்கொள்ளவும் முடிந்தது.

இன்றைக்கு இந்த நிலையத்தில் சிற்சில மாற்றங்கள் இருந்தாலும், சிகிச்சை முறைகளில் நவீனங்கள் புகுந்துவிட்டாலும், மக்களுக்கான சேவையில் குறையே இல்லை.

**...வலம் வருவோம்**

## அடையாளத்தை மாற்றும் கல்வி!



“உங்கள் கல்விக்கு எந்தத் தடையும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது என் பொறுப்பு! எதிலும் கவனத்தைச் சிதற விடாமல், எங்கேயும் தேங்கி நின்றுவிடாமல் தொடர்ந்து படிக்க வேண்டும் என்பதைத் தான் பதிலுக்கு உங்களிடம் நான் எதிர்பார்க்கிறேன்”!

சமீபத்தில், பள்ளிக் கல்வித் துறை நடத்திய நிகழ்ச்சியில், 'திராவிட மாடல்' நாயகர் கழகத் தலைவர் முதலமைச்சர் பேசியதன் சாரம் இது.

படிப்புதான் வாழ்க்கையை மாற்றும் என்பதற்கு, ஆதாரமாக தமிழ்நாடு பணியாளர் தேர்வாணையப் போட்டித் தேர்வுகளில் வென்று, பதவி பெறும் பட்டியலைப் பார்த்தாலே தெரியும். பரம்பரை பரம்பரையாகக் கூலித் தொழிலாளிகளாக இருப்பவர்களின் அடையாளத்தை, கல்விதான் மாற்றுகிறது. அதன் ஒரு சான்றாக இருக்கிறார் மன்னார்குடி நகராட்சி ஆணையாளராகப் பொறுப்பேற்றுள்ள துர்கா.

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியைச் சேர்ந்தவர் சேகர். தூய்மைப் பணியாளர். அவரது மகள் துர்கா, அரசுப் பள்ளி, கல்லூரியில் படித்து, கடந்த 2022-இல் குரூப்-2 முதல்நிலைத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார். பின்னர், 2023-ஆம் ஆண்டு நடைபெற்ற முதன்மைத் தேர்விலும் வெற்றி பெற்றார். இறுதியாக, 2024-இல் நடந்து முடிந்த நேர்முகத் தேர்வில் 30க்கு 30 மதிப்பெண் பெற்று வெற்றிபெற்ற துர்கா, தற்போது மன்னார்குடி நகராட்சி ஆணையாளராகப் பொறுப்பேற்றுள்ளார்.

சேகர் மட்டுமல்ல, சேகரின் தந்தையும் தூய்மைப் பணியாளர்தான். இப்படி வழிவழியாக தூய்மைப் பணியாளர், சலவைத் தொழிலாளி, கூலித் தொழிலாளர் என ஒடுக்கப்பட்டவர்களின் அடையாளத்தை மாற்றி இருக்கிறது கல்வி. இந்த மாற்றத்தை உருவாக்க, கல்வியால் மட்டுமே முடியும். அதற்காகத்தான் 'படி', 'படி' என கைப்பிடித்து அழைத்துச் செல்கிறது, 'திராவிட மாடல் அரசு'.

## ஃப்ளாஷ்பேக்





இரவை பிரகாஷ்

### இரவை தந்த வரவேற்பு!

அம்பத்தூருக்கு 1984-ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் கலந்துகொள்ள வருகை தந்தார். அப்போது அம்பத்தூர் நகரச் செயலாளராக இருந்த என்னுடைய தந்தை மிசா இரவைக்கண்ணன், தலைவர் கலைஞரை வரவேற்று மாலை அணிவித்து சிறப்புச் செய்தார். அப்படியான தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது. என் தந்தையார் அமைத்துக் கொடுத்த பாதையில் இன்றைக்கும் கழகப் பணியாற்றி வருகிறேன்.

**– இரவை பிரகாஷ், பகுதிப் பிரதிநிதி, அம்பத்தூர் வடக்கு, சென்னை கிழக்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்


### போட்டியிடாத தேர்தல்!

1946-ஆம் ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரை, சென்னை மாகாணத்துக்கான தேர்தல் நடைபெற்றது. நீதிக்கட்சி, திராவிடர் கழகமாக, பெயர் மாற்றம் ஆகியிருந்ததோடு, 'தேர்தலுக்கு நிற்பதில்லை' எனும் தற்காலிக முடிவை எடுத்திருந்தது. அதனால், அந்தத் தேர்தலில், நீதிக்கட்சியைச் சார்ந்திருந்தோர் எவரும் போட்டியிடவில்லை. அன்றைய சூழலில் மத்திய சட்டசபையிலும், மாநில சட்டசபைகளிலும் காங்கிரஸ், முஸ்லிம் லீக் என இரண்டு கட்சிகள் மட்டுமே பெரும்பான்மை பெற்ற கட்சிகளாக இருந்தன.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

514

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131